ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2011/14 - 2017 මාර්තු මස 22 වැනි බදාදා - 2017.03.22

*2011/14 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வடக்கு மாகாண மாகாண சபை

*2016 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க வடக்கு மாகாண மாகாண சபை நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள நியதிச்சட்டம்*

வடக்கு மாகாண, மாகாண சபையால் 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க வடக்கு மாகாண மாகாண சபை நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள நியதிச்சட்டத்திற்கு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆம் திகதி சம்மதம் வழங்கப்பட்டுள்ளது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

க. தெய்வேந்திரம்
செயலாளர்,
பேரவைச் செயலகம்,
வடக்கு மாகாண சபை.

பேரவைச் செயலகம்
ஏ 9 வீதி,
கைதடி,
2017, மாச்சு 17.

வடமாகாணத்திற்கான நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் திணைக்களமொன்றைத் தாபிப்பதற்கும், நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் மாகாண ஆணையாளரின் நியமனத்திற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு நியதிச்சட்டம் இந் நியதிச்சட்டம் 1944 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க தவறாளர்களின் நன்னடத்தை பாதுகாவல் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு ஒவ்வாததாகும்.

இலங்கைச் சனநயாக சோசலிசக் குடியரசின் வடமாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. இந்தியதிச்சட்டமானது 2016ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, வடமாகாண நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் திணைக்கள நியதிச்சட்டம் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், வடமாகாண ஆளுநர் அதற்கான தனது சம்மதத்தை அளித்தவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.



இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## பாகம் I

*நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் திணைக்களமொன்றைத் தாபித்தல்*

*நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் திணைக்களமொன்றைத் தாபித்தல்.*

2. (இதனகத்துப்பின்னர் " திணைக்களம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வடமாகாண நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் திணைக்களம் என அறியப்படும் திணைக்களமொன்று இந்நியதிச்சட்டத்தின் 5ஆம் பிரிவில் குறித்துரைக்கப்படும் திணைக்களத்தின் குறிக்கோள்களைக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்கென தாபிக்கப்படுதல் வேண்டும்.

*நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் மாகாண ஆணையாளர் நியமனமும் பிறவும்.*

3. (1) (இதனகத்துப்பின்னர் "மாகாண ஆணையாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் மாகாண ஆணையாளராக தகுதியான ஆளொருவர் நியமிக்கப்படுதல் வேண்டும், அவர் திணைக்களத்தின் தலைவராதல் வேண்டும். இந்நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகள் நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட மாகாண அமைச்சின் செயலாளரின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டலின் கீழ் அமுலாக்கப்படுதல் வேண்டும்.

(2) திணைக்களத்தின் குறிக்கோள்களைச் செயற்படுத்தும் நோக்கத்திற்கு அவசியமாக இருக்கக்கூடியவாறாக ஆளணி திணைக்களத்தின் ஒவ்வொரு நீதி நிர்வாகப் பிரிவிற்கு நியமிக்கப்படல் வேண்டும்.

*விதிகளை ஆக்குவதில் அமைச்சருக்குரிய அதிகாரம்.*

4. (1) இந்த நியதிச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக தேவையான எந்த விடயத்திற்காகவும் அமைச்சர் விதிகளை ஆக்கலாம்.

(2) இந்தப் பிரிவின் கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டியதுடன் அது பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது குறித்துரைக்கப்படுவதான பிறிதொரு திகதியிலிருந்து நடைமுறைக்கு வருவதாதலும் வேண்டும்.

(3) வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் அமைச்சரால் ஆக்கப்பட்ட அந்த விதிகள் மாகாண சபைக்கு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேற் சொல்லப்பட்டவாறு அனுமதிக்கப்படாத எந்த விதியும் அது அனுமதிக்கப்படாத திகதியிலிருந்து நீக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும். எவ்வாறெனினும் அத்தகைய நீக்குகை சொல்லப்பட்ட விதியின் கீழ் முன்னர் எடுக்கப்பட்ட ஏதும் நடவடிக்கைகளுக்குப் பாதகமாயிருக்கக் கூடாது. எந்த விதியும் நீக்கப்பட்டதாகக் கருதப்படும் திகதியானது வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

(4) 1987ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் IV ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் திணைக்களத்தின் பணியாட்டொகுதியினரின் நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்.

*திணைக்களத்தின் குறிக்கோள்கள்.*

5. திணைக்களம் பின்வரும் குறிக்கோள்களை நோக்கியதான செயற்பாடுகளுக்கு பொறுப்பாயிருத்தல் வேண்டும் :

(அ) சிறுவருக்கான சட்டப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்;

(ஆ) நன்னடத்தைப் பாதுகாவல் கட்டளையை ஆக்குவதற்கு நீதிமன்றத்திற்கு உதவியளித்தல்;

(இ) சிறுவருக்கென மாற்றீடான கவனிப்பு முறைமையை ஏற்பாடு செய்தலும் வசதியளித்தலும்;

(ஈ) சிறுவர் தவறாளர்களை புனர்வாழ்வு மற்றும் புனருத்தாரணம் கருதி நிறுவன மயப்படுத்தலும் அவர்களுக்கு கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழில்சார் பயிற்சியை ஏற்பாடு செய்தலும் மீள சமூகமயப்படுத்தலும்;

(உ) பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான உள சமூக ஆதரவை ஏற்பாடு செய்தல் ;

(ஊ) வறுமை அல்லது வேறு சமூக தேவைப்பாடுகள் காரணமாக வாழ்வில் சீர்குலையக்கூடிய சிறுவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கும் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தலும், சிறுவர் உழைப்பைத் தடுத்தலும்;

(எ) சிறுவர் தொடர்பில் மிகவும் கருணை மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட நீதிசார் நடவடிக்கைகளை எடுத்தல்; அத்துடன்

(ஏ) தேவையிலுள்ள சிறுவருக்குச் சேவைகளை ஏற்பாடு செய்தல்.

*திணைக்களத்தின் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகள்.*

6. திணைக்களத்தின் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) சிறுவர் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்புக்கென நடவடிக்கை எடுத்தலும், அனாதை மற்றும் கைவிடப்பட்ட சிறுவர் அத்துடன் சிறுவர் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கவனிப்பு மற்றும் பாதுகாப்பிற்கென நீதிமன்றக் கட்டளையைப் பெறுதல்;

(ஆ) துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாக்கப்பட வேண்டிய சிறுவரொருவரின் உரிமை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்கின்ற முறைகளைப் பற்றியும் விழிப்புணர்வொன்றை உருவாக்குதலும், சிறுவர் துஷ்பிரயோகத் தடுப்பு தொடர்பிலான ஆராய்ச்சியை கொண்டு ஆற்றுப்படுத்தலும்;

(இ) தேவையிலுள்ள சிறுவரின் கவனிப்பு மற்றும் பாதுகாப்பை பெற்றுக்கொள்ளுவதற்கான தோதான படிமுறைகளை எடுத்தலும், தமது பெற்றோருக்கு கீழ்படிவல்லாத, பாடசாலைக்கு ஒழுங்கீனமான, பிடிவாதமான, சமூக விரோத செய்பாடுகளில் ஈடுபட்ட சிறுவர்களை ஆற்றுப்படுத்தலும்;

(ஈ) சிறுவர் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்த மாகாண, மாவட்ட அல்லது பிரதேசக் குழுக்களையும் அதன் உப குழுக்களையும் தாபித்தல்;

(உ) சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பிலான முறைப்பாடுகளை பொதுமக்களிடமிருந்து பெறுதலும் அவசியமானவிடத்து, தோதான அதிகாரத் தரப்பினருக்கு முறைப்பாடுகளை ஆற்றுப்படுத்தலும்;

(ஊ) தேவையுள்ள சிறுவருக்கு அவசரமானதையும் மற்றும் வேறு உதவிகளையும் வழங்குதலும் சிறுவர் கவனிப்புச் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களில் தேவைநாடும் சிறுவர்களை அனுமதித்தலும்;

(எ) நிறுவன மயப்படுத்தப்பட்ட சிறுவர்களை அவர்களின் குடும்பத்துடன் மீள ஒருங்கிணைப்பதற்கென வசதியளித்தலும் உதவி வழங்குதலும்;

(ஏ) மகவேற்புக்கு உதவியளித்தலும் வசதியளித்தலும்;

(ஐ) சட்ட உயர்தொழிலர் மற்றும் சட்டம் சாரா உயர்வாண்மையுளரின் சேவைகளைப் பெறுதல்;

(ஒ) சந்தேகிக்கப்பட்ட, குற்றவாளியாகவுள்ள அல்லது கவனிப்பு அல்லது பாதுகாப்பு தேவையிலுள்ள சிறுவரொருவர் தொடர்பில் :

(i) வழக்கு நடவடிக்கைகளை இடமாற்றுவதன் பொருத்தமான தன்மை மீது நீதிமன்றத்திற்கு அறிக்கையிடுதல்;

(ii) ஏதேனும் வளர்ப்புக் கவனிப்பின் தகவுடமை தொடர்பில் சிபாரிசு செய்தல்;

(iii) கவனிப்பு அல்லது பாதுகாப்புத் தேவை தொடர்பிலான ஏதேனும் கருமத்தைப் புலனாய்வு செய்தல்;

(iv) நேர்காணல்கள், புலனாய்வுகள் மற்றும் விசாரணைகளைக் கொண்டு நடாத்துதல்;

(v) இடைக்கால சமூக அறிக்கையொன்றையும் இறுதியான சமூக அறிக்கையையும் தயாரித்து நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்தல்;

(vi) நிறுவன விடய மகாநாடு மற்றும் சமூக அடிப்படையிலான விடய மகாநாட்டைக் கூட்டுதல்

(vii) நன்னடத்தைப் பாதுகாவல் அலுவலரின் மேற்பார்வையின் கீழ் சிறுவரைப் பொறுப்பெடுத்தல்;

(viii) சிறுவருக்கெதிராக குற்றஞ்சாட்டப்பட்ட தவறை ஒத்திணங்குகின்ற நோக்கில் இயைபான விடயங்களை அடையாளங் காணவும் தீர்வுகாணவும் முயற்சித்தல்;

(ix) திணைக்களத்திற்கு அல்லது நன்னடத்தைப் பாதுகாவல் அலகிற்கு கொண்டு வரப்படும் சிறுவரின் நன்மைக்கென உணவு, நீர், மற்றும் மலசலகூடம் உட்பட அடிப்படைத் தேவைகளுக்கு வளமளித்தலும் ஏற்பாடு செய்தலும்;

(x) சந்தேகிக்கப்பட்ட சிறுவர் தவறாளர் மற்றும் கவனிப்பு அல்லது பாதுகாப்பு தேவையிலுள்ள சிறுவர் ஒவ்வொருவருக்கும் அவர்கள் வதியும் நிறுவனத்திலிருந்து நீதிமன்றத்திற்கும் நீதிமன்றத்திலிருந்து அத்தகைய நிறுவனத்திற்கும் போக்குவரத்துச் சேவைகளை வழங்குதல்;

(ஓ) சிறுவர் கவனிப்புச் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களுக்கு உரிமம் அல்லது சான்றிதழ்களை வழங்குதலும் ஏதேனும் சேவைகளுக்கு அங்கீகாரத்தை அளித்தலும் அத்துடன் அத்தகைய நிறுவனங்களை மேற்பார்வை செய்தலும் கண்காணித்தலும்;

(ஔ) சிறுவர் கவனிப்புச் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களுக்கு வழங்குகின்ற சேவைகளுக்கென ஏதேனும் கட்டணத்தை அறவிடுதல் அல்லது விதிப்பனவை விதித்தல்;

(க) 1944 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க தவறாளர்களின் நன்னடத்தைப் பாதுகாவல் கட்டளைச் சட்டத்திற்கு அமைவகாக, நீதிமன்றத்தினால் ஆக்கப்படும் நன்னடத்தை பாதுகாவல் கட்டளையினைப் பின்பற்றி எவரேனும் தவறாளரின் மேற்பார்வையைப் பொறுப்பெடுத்தலும், கட்டளையில் உட்புகுத்தப்பட்ட நிபந்தனைகள் முழுமையாகவும் கண்டிப்பாகவும் பின்பற்றப்படுகின்றனவா என அவதானித்தல்;

(ங) நன்னடத்தை பாதுகாவல் கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறான அல்லது அலுவலர் பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அதற்கமைவாக அத்தகைய இடைவெளிகளில் எவரேனும் தவறாளரைப் பார்வையிடுதலும், அவரிடமிருந்து அறிக்கைகளைப் பெற்றுப் கொள்ளுதலும்;

(ச) எவரேனும் தவறாளரின் நடத்தை மற்றும் முன்னேற்றம் தொடர்பில் அத்தகைய காலாகால அறிக்கைகளைச் தயாரித்தல்;

(ஞ) மேற்பார்வையின் கீழுள்ள தவறாளருக்கு மதியுரையளித்தல், உதவியளித்தல் மற்றும் நட்பாக நடாத்தல் அத்துடன் அவசியமானவிடத்து, அவருக்கு தொழில் மற்றும் தங்குவதற்கான உறைவிடத்தை பெற்றுக் கொடுக்க முயற்சித்தல்;

(ட) நீதிமன்றத்திற்கு எவரேனும் தவறாளரின் குணநலன், முன்னொழுக்காறு, சூழல் மற்றும் உள அல்லது உடல் நிலை தொடர்பிலான எல்லா அத்தகைய தகவல்களையும் சமர்ப்பித்தல்;

(ண) நன்னடத்தைப் பாதுகாவலுக்கென வழக்கின் பொருத்தமான தன்மை பற்றி எவரேனும் தவறாளரின் மேற்பார்வை நன்னடத்தைப் பாதுகாவல் அலுவலரால் பொறுப்பேற்க முடியுமா என்பது பற்றியும் நீதிமன்றத்திற்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல்;

(த) திணைக்கள உள்ளக நிருவாகத்திற்கான அவசியமான விதிகளை உருவாக்குதல்; அத்துடன்

(ந) பொதுவாக திணைக்களத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவாறான அத்தகைய வேறு எல்லாக் கருமங்களையும் புரிதல்.

## பாகம் II

*நிதி*

7. திணைக்களத்தின் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றவதிலும் அதனால் உறப்பட்ட செலவினங்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்பட்ட அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் திணைக்களத்திற்கு அனுமதியளிக்கப்பட்ட நிதியிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

நிதியாண்டு.

8. திணைக்களத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

கணக்குகளின் கணக்காய்வு.

9. (1) திணைக்களமானது, அதனது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினம் அத்துடன் எல்லா வேறு கொடுக்கல் வாங்கல்களையும் கணக்குப் புத்தகங்களில் முறையாகப் பேணப்படல் வேண்டும்.

(2) கணக்காய்வு தொடர்பாக 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாணசபைச் சட்டத்தின் 23(1), 23(2) ஆகிய பிரிவுகள் ஏற்புடையதாகும் என்பதுடன் நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தின் கணக்குகள், அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் நியதிகளின் படி கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய்வாளர் நிலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமை பெற்றவொரு கணக்காய்வாளரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

எவரேனும் ஆளினால் செலவுகள் திணைக்களத் தினால் செலுத் தப்படுதல்.

10. இந்நியதிச்சட்டத்தின் கீழ் மாகாண ஆணையாளரின் பணிப்பின் மீது எவரேனுமாளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துரட்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட ஏதேனும் செலவு அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய, திணைக்கள நிதி ஒதுக்கீட்டிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

## பாகம் III

பொதுவானவை

*11.* மாகாண ஆணையாளர், தனது தத்துவங்கள், பணிகள் அல்லது கடமைகளில் எவற்றையும் பொருத்தமான திணைக்கள பணியாட் தொகுதியினருக்கு கையளிக்கலாம். *தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் கையளித்தல்.*

*12.* (1) திணைக்களமானது, பின்வரும் நிறுவனங்களைப் பதிவு செய்து மேற்பார்வை செய்தல் வேண்டும் :- *குறித்த சில நிறுவனங் களைப் பதிவு செய்தல்.*

(அ) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 452 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட இல்லம்;
(ஆ) சிறுவர் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச்சட்டத்தின் 48 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட விளக்கமறியல் இல்லம்;
(இ) சிறுவர் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச்சட்டத்தின் 50 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை;
(ஈ) சிறுவர் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச்சட்டத்தின் 51 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட சான்றுறுதிப்படுத்தப்பட்ட பாடசாலை;
(உ) அநாதை இல்லங்கள் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட அநாதை இல்லம்;
(ஊ) அநாதை இல்லங்கள் கட்டளைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட சிறுவர் இல்லம்;
(எ) சிறுவர் பாதுகாப்பு இல்லம்
(ஏ) பாலர் பகல்நேர கவனிப்பு நிலையங்கள்
(ஐ) அரச பொறுப்பேற்கும் இல்லம்;
(ஒ) சிறுவர் அபிவிருத்தி நிலையம்;
(ஓ) தங்குமில்லங்கள் மற்றும் மாணவ விடுதிகள்; அத்துடன்
(ஔ) சிறுவர் கவனிப்புச் சேவையை வழங்குகின்ற ஏதேனும் நிறுவனங்கள்.

(2) மாகாண ஆணையாளர் உட்பிரிவு (1) இல் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் நிறுவனத்திடமிருந்து அவர் பொருத்தமானதெனக் கருதுகின்ற போதிலெல்லாம் தகவலைச் சேகரிக்கலாம்.

(3) மாகாண ஆணையாளரால் கோரப்படும் தகவல்களை அவ்வப்போது வழங்குவது இத்தகைய நிறுவனங்களது கடமையாகும்.

*13.* இத்தால் பின்வருமாறு பிரகடனம் செய்யப்படுகின்றது. *பேணல்கள்.*

(அ) நடைமுறைக்கு வரும் தேதிக்கு முற்போந்த நாளன்று வட மாகாணத்தின் நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் திணைக்களத்திற்குரித்தாக்கப்பட்ட எல்லா அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களும், இந்நியதிச்சட்டம் நடைமுறைக்குவரும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக திணைக்களத்திற்கு உரித்தாதல் வேண்டும்.

(ஆ) நடைமுறைக்கு வரும் தேதிக்கு முற்போந்த நாளன்று வட மாகாணத்தின் நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் அல்லது அதனுடன் செய்து கொள்ளப்பட்டவையும், நியமிக்கப்பட்ட தேதிக்கு முற்போந்த நாளன்று உள்ளவையுமான எல்லா ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும், இந்நியதிச்சட்டம் நடைமுறைக்குவரும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக திணைக்களத்தினால் அல்லது அதனுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும் உடன்படிக்கைகளாகவும் கருதப்படுதலும் வேண்டும்.

(இ) நடைமுறைக்குவரும் தேதிக்கு முற்போந்த நாளன்று வட மாகாணத்தின் நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் திணைக்களத்தினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டவையும், நடைமுறைக்கு வரும் தேதிக்கு முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எல்லா வழக்குகளும், வழக்கு நடவடிக்கைகளும் இந்நியதிச்சட்டம்

நடைமுறைக்கு வரும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக திணைக்களத்தினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளாகவும் வழக்கு நடவடிக்கைகளாகவும் கருதப்படுதலும் வேண்டும். அத்துடன் அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தப்படுதலும் முடிவு செய்யப்படுதலும் வேண்டும்.

(ஈ) நடைமுறைக்கு வரும் தேதிக்கு முற்போந்த நாளன்று வட மாகாணத்தின் நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் திணைக்களத்தின் சார்பில் அல்லது அதற்கெதிராக அளிக்கப்பட்டவையும் அல்லது ஆக்கப்பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு முற்போந்த நாளன்று திருப்தி செய்யப்படாதவையுமான எல்லாத் தீர்ப்புகளும் கட்டளைகளும், இந்நியதிச்சட்டம் நடைமுறைக்குவரும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக திணைக்களத்தின் சார்பில் அல்லது அதற்கெதிராக அளிக்கப்பட்ட தீர்ப்புகளாகவும் ஆக்கப்பட்ட கட்டளைகளாகவும் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் அதற்கிணங்க வலுவுறுத்தவும் படலாம்; அத்துடன்

(உ) நடைமுறைக்குவரும் தேதிக்கு முற்போந்த நாளன்று வட மாகாணத்தின் நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் திணைக்களத்தின் எல்லாப் பொறுப்புகளும் இந்நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக திணைக்களத்தின் பொறுப்புகளாக கருதப்படுதலும் வேண்டும்.

பொருள்கோடல்.

14. இந்நியதிச்சட்டத்தினால் சந்தர்ப்பம் வேறு வகையில் தேவைப்படுத்தினாலன்றி

“அமைச்சர்” என்பது, வடமாகாணத்தின் நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் எனப் பொருள்படும்;

‘‘நன்னடத்தை பாதுகாவல் கட்டளை’’ என்பது (24 ஆம் அத்தியாயமான) தவறாளவர்களின் நன்னடத்தைப் பாதுகாவல் கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று எனப் பொருள்படும்; அத்துடன்

‘‘எழுத்திலான சட்டம்’’ என்பது, ஏதேனும் சட்டமும் துணைநிலைச்சட்டமும் எனப் பொருளாவதுடன், வட மாகாண சபையினால் ஆக்கப்படும் நியதிச்சட்டங்கள், மற்றும் ஏதேனும் சட்டத்தின்கீழ் சட்டங்களையும் பிரகடனங்களையும் விதிகளையும் துணைவிதிகளையும் ஒழுங்குவிதிகளையும் ஆக்குவதற்கு அல்லது வழங்குவதற்குத் தத்துவம் அல்லது அதிகாரமுடைய ஏதேனும் குழுவினால் அல்லது ஆளினால் ஆக்கப்படும் அல்லது வழங்கப்படும் அத்தகைய கட்டளைகள் பிரகடனங்கள், விதிகள், துணைவிதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றையும் உள்ளடக்கும்.

ஒவ்வாமையின் விடயத்தில் தமிழ் உரை மேலோங்கி நிற்றல்.

15. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

4-63

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.